என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

திரு.ப.முகேஷ்குமார், என்பவரின் பிறந்த தேதி 01.11.1991 என்பதால் அரசு ஊழியர் இறந்த நாளான 23.03.2006 அன்று 15 வருடம் 8 மாதம் 23 நாட்கள் வயதினை பூர்த்தி செய்துள்ளார். 'அரசாணை (நிலை) எண்.155, **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (கியூ1)த் துறை, நாள் 10.12.2014–இல் பத்தி 6–இல் கீழ்கண்டவாறு பரிசீலிக்கலாம் எனவும்** தெளிவுரைகள் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**"23.08.2005 முதல் 03.05.2010 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்தவர்கள் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கான குறும வயதி தகுதி தவிர, அனைத்து பிற தகுதிகளை பணி கோரிய விண்ணப்ப நாளிலும், குறும வயதுத் தகுதி மட்டும் (18 ஆண்டுகள் நிறைவு) பணி நியமன நாளிலும் நிறைவு செய்திருந்தால் போதுமானதாக கருதப்பட வேண்டும்."**

திரு.ப.முகேஷ்குமார், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்ததாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததாலும், திரு.ப.முகேஷ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிக இளநிலை உதவியாளராக, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி மாவட்ட காசநோய் மையத்தில் பணியமர்த்தப்பட்டு 11.12.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ப.முகேஷ்குமார் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை–9இல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 11.12.2019 முற்பகல் முதல் தனியர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ்.குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திரு.ப.முகேஷ்குமார்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட காசநோய் மையம், பூந்தமல்லி,
திருவள்ளூர் மாவட்டம்.
-- இணை இயக்குநர் நலப்பணிகள், திருவள்ளூர் மூலமாக

நகல்
இணை இயக்குநர் நலப்பணிகள், திருவள்ளூர்.
நிர்வாகப் பிரிவு 2 (2 நகல்கள்)
நிர்வாகப் பிரிவு 2 (முதுநிலை)
இருப்புக் கோப்பு / உதிரி

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

4229 / 3 / 2020

JOINT DIRECTOR OF HEALTH SERVICES
TIRUVALLUR

**பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்**

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை–6 அவர்களின் செயல்முறை ஆணை

**முன்னிலை: மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),**

**ந.க.எண்.58942/நிபி8/1/2021**

நாள்: 24.06.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.ப.முகேஷ்குமார், (கு/பெ.(அமரர்) திரு.ஆர்.பழனிவேலு, உதவியாளர், அரசு மருத்துவமனை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்) – கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது - பணி வரன்முறை – ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:

1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3) அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.
4) அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2007.
5) அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10.12.2014.
6) இவ்வியக்கக கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பணிநியமன ஆணை ந.க.எண்.66933/நிபி8/1/2019, நாள் : 28.11.2019.
7) இவ்வலுவலக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.72853/நிபி2/2/2019–5, நாள் 29.11.2019.
8) திருவள்ளூர் மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் கடித ந.க.எண்.4229/நிபி3/2020, நாள் : 23.11.2020.
9) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.02.2021.
10) அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 16.03.2021.

*****

**ஆணை:**

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)–ன்படி, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, அரசு மருத்துவமனையில் உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே **23.03.2006** அன்று இயற்கையெய்திய திரு.ஆர்.பழனிவேலு மகனும் வாரிசுதாரருமாகிய திரு.ப.முகேஷ்குமார் (பிறந்த தேதி 01.11.1991) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, அரசு மருத்துவமனையில் உதவியாளராகப் பணிபுரிந்த திரு.ஆர்.பழனிவேலு என்பவர் 25.06.1984 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, **24.06.1986** தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 15.04.1955, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.04.2013 ஆகும். இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.ப.முகேஷ்குமார்